DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.119/2025
Prosecution Witness P.W.12

Name : **திரு.Dr.ராகுல்**
Caste:

Father's Name :**திரு.**
Calling :

Village:
Religion :

Taluk :
Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 28.01.2026.**
(சாட்சி காணொளி காட்சி மூலம் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது பெரம்பலூர் தனலட்சுமி ஸ்ரீனிவாசன் மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.11.2024-ம் தேதியன்று தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் போதகராக பணிபுரிந்தபோது P.C பட்டி காவல் நிலைய குற்ற எண். 454/2024 வழக்கில் சம்பந்தப்பட்ட 42 வயதான தாமோதரன் என்பவரது உடற்கூறாய்வுக்காக பழனிசெட்டிபட்டி காவல் ஆய்வாளர் அவர்களது விண்ணப்பத்தின் பேரில் அன்றைய தினம் 12.55 மணிக்கு அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று பிரேதத்தில் காணப்பட்ட அங்கமச்ச அடையாளங்களை சரிபார்த்து 01.10 மணியளவில் பிரேத பரிசோதனை தொடங்கினேன். அப்போது மரண விரைப்பானது உடல் முழுவதும் காணப்பட்டது. உடலானது மெதுவான உடல்வாகுவுடன் காணப்பட்டிருந்தார். அவரது வலது நெஞ்சு பகுதியில் ஐ.சி.டி இருந்ததற்கான காயம் காணப்பட்டது. அவரது கால் மற்றும் கைவிரல் நகங்கள் வெளிறிய நிலையில் காணப்பட்டது.

**<u>அவரது உடலில் காணப்பட்ட வெளிப்புற காயங்கள் பின்வருமாறு</u>**

**<u>காயம் எண். 1</u>**

2 x 1 Cm அளவிலான சிவப்பு மற்றும் பழுப்பு நிறத்திலான ஒரு சிராய்ப்பு காயம் வலது மற்றும் இடது முட்டியில் உள்பகுதியில் காணப்பட்டது.

**<u>காயம் எண். 2</u>**

2 x 1 Cm அளவிலான சிவப்பு மற்றும் நீளம் கலந்த கன்றிய காயம் இடது காலின் முன் பகுதியில் காணப்பட்டது.

**<u>காயம் எண். 3</u>**

8 x 7 Cm அளவிலான சிவப்பு மற்றும் நீலம் கலந்த நிலையில் ஒரு கன்றிய காயமானது இடது தொடையின் முன் பகுதியில் காணப்பட்டது.

**<u>காயம் எண். 4</u>**

12 x 5 Cm அளவிலான சிவப்பு மற்றும் நீல நிறத்தில் ஆன கன்றிய காயம் வலது தொடையின் முன் பகுதியில் காணப்பட்டது

**<u>காயம் எண். 5</u>**

5 x 3 Cm அளவிலான சிவப்பு மற்றும் நீல நிறத்திலான கன்றிய காயம் வலது தொடையின் முன்புற கீழ் பகுதியில் காணப்பட்டது. மேலே சொன்ன நான்கு காயங்களும் அதன் ஆழமானது ஒரு சென்டிமீட்டர் குள் காணப்பட்டது.

**<u>காயம் எண். 6</u>**

12 x 5 Cm அளவில் ஆன சிவப்பு மற்றும் நீல நிறத்திலான ஒரு கன்றிய காயம், வலது தொடையின் பின்புறத்தில் காணப்பட்டது.

**<u>காயம் எண். 7</u>**

15 x 1.5 Cm அளவிலான சிவப்பு மற்றும் நீல நிறத்திலான ஒரு கன்றிய காயம், தண்டவாளம் போன்ற அமைப்புடைய ஒரு காயம் இடது முதுகின் மேல் மற்றும் நடுப்பகுதியில் காணப்பட்டது.

**காயம் எண். 8**

22 x 17 Cm அளவிலான சிவப்பு மற்றும் நீல நிறத்திலான கன்றிய காயமானது. வலது பக்க முதுகின் மேல் புறம் மற்றும் நடுப்புறத்தில் காணப்பட்டது. அதில் தண்டவாளம் போன்ற ஒரு கன்றிய காயமானது அதன் கீழ் பகுதியில் காணப்பட்டது. அதில் 1 x 0.5 Cm அளவிலான ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

**காயம் எண்.9**

28 x 16 Cm அளவிலான சிகப்பு மற்றும் நீல நிறத்திலான ஒரு கன்றிய காயம் எண் 7–ல் அந்தப் பகுதியில் காணப்பட்டது, அது இடது தோள்பட்டை பகுதியில் காணப்பட்டது.

**காயம் எண்.10**

14 x 9 Cm அளவிலான சிகப்பு மற்றும் நீல நிறத்திலான ஒரு கன்றிய காயம் முதுகின் நடுப்பகுதியில் மேலிருந்து கீழ் வரை காணப்பட்டது.

**காயம் எண். 11**

வலது கையில் பின்புறத்தில் மொத்தமாக நீல நிறத்திலான ஒரு கன்றிய காயம் காணப்பட்டது. அதில் 3 x 1 Cm அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது. இக்காயமானது முழங்கையின் மேல் பகுதியில் வெளிப்புறத்தில் காணப்பட்டது. 6x1.5 Cm அளவிலான சிராய்ப்பு காயமானது வலது முன்னங்கையில் கீழ் பகுதியில் வெளிப்புறத்தில் காணப்பட்டது. இதை கூறாய்வு செய்து பார்த்தபோது அதை அதன் அடியில் இருந்த தசைகளில் ரத்தக்கசிவு காணப்பட்டது.

**காயம் எண்.12**

4 x 3 Cm அளவிலான சிகப்பு மற்றும் நீல நிறத்திலான ஒரு கன்றிய காயம் வலது முன்னங்கையின் கீழ் பகுதியில் முன்புறத்தில் காணப்பட்டது.

**காயம் எண். 13**

8 x 4 Cm அளவிலான சிகப்பு மற்றும் நீல நிறத்திலான ஒரு கன்றிய காயம் வலது கையின் முன்புறத்தில் காணப்பட்டது.

**காயம் எண். 14**

3 x 2 Cm அளவிலான சிகப்பு மற்றும் நீல நிறத்திலான ஒரு கன்றிய காயம் இடது கையின் முன்புறத்தில் கட்டைவிரல் பகுதியில் காணப்பட்டது.

**காயம் எண். 15**

10 x 6 Cm அளவிலான சிகப்பு மற்றும் நீல நிறத்திலான ஒரு கன்றிய காயம், இடது முன்னங்கையில் மேல் புறத்தில் முன்பகுதியில் காணப்பட்டது.

**காயம் எண் 16**

12 x 4 Cm அளவிலான சிகப்பு மற்றும் நீல நிறத்திலான ஒரு கன்றிய காயம் இடது முன்னங்கையில் பின்புறத்தில் காணப்பட்டது. காயம் எண் 12–ல் இருந்து 16 வரை சுவராய்வின்போது இவை கண்டுபிடிக்கப்பட்டது.

**காயம் எண். 17**

இடது கையின் பின்புறத்தில் முழுவதுமாக சிகப்பு மற்றும் நீல நிறத்திலான ஒரு கன்றிய காயம் காணப்பட்டது..

**காயம் எண். 18**

14 x 4 Cm அளவிலான சிகப்பு மற்றும் நீல நிறத்திலான ஒரு கன்றிய காயம் இடது மேல் கையில் உள்புறம் மற்றும் வெளிப்புறமாக காணப்பட்டது..

**காயம் எண். 19**

12 x 6 Cm அளவிலான சிகப்பு மற்றும் நீல நிறத்திலான ஒரு கன்றிய காயம் வலது மேல் கையில் வெளிப்புறத்தில் காணப்பட்டது.

**காயம் எண். 20**

1 x 0.5 Cm அளவிலான சிகப்பு நிறத்திலான சிராய்ப்பு காயம் இடது தாடையில் காணப்பட்டது. 4.00 Cm கீழே மேலும் இதே போல் ஒரு காயம் காணப்பட்டது.

**காயம் எண். 21**

3 x 1 Cm மற்றும் 2 x 1 Cm அளவிலான ஒரு சிராய்ப்பு காயமானது இடது மற்றும் நடு நெற்றியில் காணப்பட்டது.

2. மேலும் உடல் கூறாய்வில் மேலே கூறப்பட்டது போல முதுகின் மேல் புறத்திலிருந்து கன்றிய காயங்கள் முதுகின் ஆழமான பகுதியில் ரத்த கசிவு காணப்பட்டது. அது எலும்பு வரை காணப்பட்டது. மேலும் நடு மற்றும் கீழ் முதுகு பகுதியில் உள்ள தசைகளில் ரத்தக் கசிவு காணப்பட்டது. வலது புற மேல் மார்பகங்களில் உள்ள தசைகளில் ரத்தக்கசிவு காணப்பட்டது. மேலும் வலது புற நடு மற்றும் கீழ்பகுதியில் மார்பகங்களிலும் ரத்தக் கசிவு காணப்பட்டது.

3. இடதுபுற மார்பக பகுதியில் மேல் மற்றும் நடுப்பகுதியில் சிறிதளவிலான ரத்தக்கசிவு காணப்பட்டு இருந்தது. நெஞ்சு பகுதியை கூறாய்வு செய்து பார்த்தபோது 30 மில்லி அளவிலான இரத்தம் கலந்த திரவமானது பெரிகார்டியம் பகுதியில் காணப்பட்டது. மேலும் இடது புறத்தில் ஆன விலா எலும்புகள் 4,5,6 பகுதியில் இடைப்பட்ட தசைகளில் ரத்த கசிவு காணப்பட்டது.. மேலும் வலது புற விலா எலும்பான 6, 7 மற்றும் 8 இதன் இடையில் உள்ள தசைகளிலும் ரத்தக் கசிவு காணப்பட்டது. இரு நுரையீரல்களிலும் ஆங்காங்கே ரத்தக் கசிவு காணப்பட்டது.

4. தலையில் ஆக்ஸிபிட்டல் பகுதியில் முழுமையாக ரத்தக் கசிவு காணப்பட்டது. அதேபோல் டெம்போரல் பகுதியில் ரத்தக்கசிவு காணப்பட்டது. பின்புறத்தில் ரத்தக் கசிவு காணப்பட்டது. சக்தியுடன் மற்றும் 25 கிராம் அளவிலான உறைந்த ரத்தம் வலது பக்க டெம்போரல் பகுதியில் ஆக்ஸ்பிட்டல் லோன் பகுதியில் காணப்பட்டது. மேலும் இதே பகுதிகளில் சப் அரக்கனாய்ட் கெமரேஜ் ஆனது பரவலாக காணப்பட்டது. கழுத்துப் பகுதியை கூறாய்வு செய்ததில் இடது பக்க கழுத்து தசைகளில் சிறிதளவு ரத்தம் கசிந்த நிலையில் இருந்தது.

**இதர கண்டறிவுகள்**

5. இதயமானது சீராக இருந்தது. அதன் ரத்த நாளங்கள் சீராக இருந்தது. நாவடி எலும்பு சீராக இருந்தது. வயிற்றில் 75 மில்லி அளவிலான பழுப்பு நிற திரவமானது எவ்வித நெடியும் இன்றி காணப்பட்டது. அதன் மென்சவ்வானது

வெளிறிய நிலையில் காணப்பட்டது. நுரையீரல் ஆனது மேலே குறிப்பிட்டது போல் இருந்தது. அதன் வெட்டுப் பகுதி வெளிறிய நிலையில் காணப்பட்டது. சிறுநீரகம், கல்லீரல், மண்ணீரல் ஆகியவை சீராக இருந்தது அதன் வெட்டுத்தோட்டம் வெளிறிய நிலையில் காணப்பட்டது.

6. சிறுகுடலில் 50 மில்லி அளவில் ஆன பழுப்பு நிறத்திலான திரவம் எவ்வித நெடியும் இன்றி காணப்பட்டது. அதன் மென்சவ்வானது வெளிறிய நிலையில் காணப்பட்டது. சிறுநீரகப் பையில் 20 மில்லி அளவிலான சிறுநீரகம் இருந்தது. மூளை மேலே குறிப்பிட்டதை போல் இருந்தது. இறந்தவரின் ரத்த மாதிரிகள் சேகரம் செய்யப்பட்டது. உடல் உள்ளுறுப்புகள் சேகரம் செய்யப்பட்டு விஸ்ரா அறிக்கை பெறக் கோரி கருத்துரை வழங்க அனுப்பி வைக்கப்பட்டது விசார அறிக்கை பெற்ற பின்னர் இறந்தவர் உடலில் எவ்வித நச்சுப்பொருளோ மதுவோ இல்லை என்பதை உறுதி செய்த பின்னர் எனது இறுதி கருத்துரையை நான் வழங்கினேன்.

7. இறந்தவரின் தலை, மார்பு, வயிறு மற்றும் பின் பகுதியில் ஏற்பட்டுள்ள பலதரப்பட்ட மழுங்கிய ஆயுதங்களால் ஏற்பட்ட காயங்களினால் அவர் இறந்திருக்க கூடும் கருத்துரை வழங்கினேன். மேற்கண்ட இறந்து போனவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டு அதன் பிறகு அவர் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைக்க பரிந்துரை செய்த பின்னர் அவரது தகப்பனார் அவரை தன்னிச்சையாக மருத்துவமனையில் இருந்து விடுவித்துக் கொண்டு வீட்டுக்கு சென்று அங்கு அவர் இறந்துள்ளது தெரியவந்தது.

8. நீதிமன்றத்தின் காண்பிக்க கூடிய மரத்தின் உடைந்த காய்ந்து போன கிளை பாகம் மற்றும் தென்னை மட்டை ஆகியவற்றை கொண்டு இறந்தவர் உடலை தாக்கும்போது இவ்வாறான காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. தண்டவாளம் போன்ற உடலில் காயங்கள் இருந்தது தென்னைமர ஓலையின்

நடுப்பகுதியைக் கொண்டு தாக்கும்போது இவ்வாறான தண்டவாளம் போன்ற தழும்புகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

9. சில மணி நேரங்களுக்கு முன்பு இந்த காயங்கள் ஏற்பட்டிருக்க கூடும் என்பதால் தான் நான் காயங்கள் சிகப்பு மற்றும் நீல நிறத்தில் இருந்ததாக தெரிவித்துள்ளேன். நான் வழங்கிய பிரதே பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7. விஸ்ரா அறிக்கை அ.சா.ஆ.8, இறுதி கருத்துறை அ.சா.ஆ.9, எனக்கு எழுத்துப்பூர்வமாக கேள்விகள் கேட்கப்பட்டு அதற்கு நான் பதில் அளித்துள்ளேன் அந்த பதிலானது அ.சா.ஆ.10.

<u>எதிரிகள் 1, 2, 6, 7 தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்து எனது வாக்குமூலம் வாங்கினார். அந்த வாக்குமூலம் எத்தனாம் தேதி எங்கு வைத்து நான் வழங்கினேன் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. ஆயுதங்களை எடுத்து வந்த ஆய்வாளர் என்னிடம் காட்டி கருத்துரை பெற்றாரா என்றால் என்னிடம் ஆயுதங்களை காட்டி இது போன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என ஆய்வாளர் என்னிடம் கருத்துரை பெற்றார்.

2. ஆய்வாளர் என்னிடம் ஆயுதங்களை நேரடியாக எடுத்து வந்து காட்டி கருத்துரை பெற்றாரா அல்லது அந்த ஆயுதங்களின் புகைப்படங்களை காட்டி கருத்துரை பெற்றாரா என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை ஆனால் இது போன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என ஆய்வாளர் என்னை விசாரணை செய்தது ஞாபகம் உள்ளது. என்னை ஆய்வாளர் விசாரணை செய்யும் பொழுது ஆயுதங்கள் எதையும் கொண்டு வரவில்லை என்றும் நான் சொன்ன கருத்துரையின் அடிப்படையில் ஆயுதங்கள் பின்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

3. சுமார் 4 அடி உயரத்திலிருந்து ஒரு மணல்மேட்டிலிருந்து கீழே வழுக்கி மழுங்கலான கற்குவியல் மீது இறந்து போனவர் மல்லாக்க விழும்போது இவ்வாறான காயங்கள் அவர் உடலில் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால்

வாய்ப்பில்லை. அவ்வாறு விழுந்து அந்த காயம்பட்ட நபர் மீண்டும் எழுந்து மீண்டும் அதே கற்குவியல் மீது குப்புற விழும்போது இவ்வாறான காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் வாய்ப்பில்லை. அதே மழுங்கலான கற்குவியல் மீது பல முறை எழுந்து, எழுந்து விழும்போது இவ்வாறான காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் வாய்ப்பில்லை. நான் அரசுக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆயுதங்களைப் பார்க்காமல் கருத்துரை வழங்குகிறேன் என்றால் சரியல்ல.

<u>3–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

4. உயரமான ஒரு பகுதியில் இருந்து தென்னை மட்டைகள் நிறைந்த இடத்தில் காயம்பட்ட நபர் கீழே தன்னிச்சையாக விழும் பொழுது இவ்வாறான காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் வாய்ப்பில்லை. நான் பிரேத விசாரணை செய்யும்போது மூக்கில் காயம் பட்டவருக்கு ரத்தம் வந்திருந்ததா என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. நான் பிரேத பரிசோதனை மேற்கொள்ளும் பொழுது பிரேதத்தில் காணப்பட்டுள்ள காயங்கள் மற்றும் ரத்தப்போக்குகள் குறித்து வைத்திருப்பேன் என்றால் சரிதான். அவ்வாறு குறித்து வைக்கும் பொழுது ரத்தம் வந்ததாக நான் குறித்து வைத்துள்ளேனா என்றால் நான் பார்க்கும்போது ரத்தம் எதுவும் பிரேதத்தின் மூக்கிலிருந்து வரவில்லை.

தலையின் வெளிப்பகுதி மற்றும் உள்பகுதியில் ரத்தக்கசிவு காணப்பட்டது அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அவர் காயம் ஏற்பட்ட இடத்தில் நிறைய ரத்தப்போக்குகள் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டா என்றால் எல்லாமே கன்றிய காயங்கள் தான் சிதைந்த காயங்கள் இல்லை என்பதால் சம்பவயிடத்தில் காயங்களால் ரத்தப்போக்கு ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. எனது மரபுக்கு மீறி நான் பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்தவர் உடலில் ஏற்பட்டுள்ள காயங்கள் அனைத்தும் முறையாக சிகிச்சை அளிக்கும் பட்சத்தில் அவை குணப்படுத்தக்கூடிய காயங்களா என்றால் நிறைய காயங்கள் மற்றும்

ரத்தப் போக்குகள் காணப்பட்டதால் அவர் சிகிச்சை அளித்திருந்தாலும் அவர் மரணம் நிகழ்ந்திருக்கும்.

**4–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. காயம் பட்ட நபரை மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்பட்டிருந்தேன் அவர் அந்த சிகிச்சைக்கு உடனே செல்லாத காரணத்தினால் தான் மரணம் ஏற்பட்டுள்ளது என்றும், அவர் உடனே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு முயற்சி வழங்கப்பட்டு இருந்தால் அவர் குணமாக்கி இருக்க கூடும் என்றால் உறுதியாக அவ்வாறு கூற முடியாது.

**5 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**(மேற்கண்ட குறுக்கு விசாரணையை தனது குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது)**

**மறுவிசாரணை – இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.28 16:02:16 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.